*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 25th SEPTEMBER, 1981 No. 39

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland : Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to :*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

RECEIVED LIBRARY

## 96th Session of the Diocesan Council of the Diocese of Colombo

The Diocesan Council of the Diocese of Colombo, of the Church of Ceylon will be held on October 7, 8 and 9th at the Diocesan Council Hall at Bauddhaloka Mawatha. On the 6th there will be the Diocesan Evenong at Cathedral of the Living Saviour. The Preacher will be the Rev. Gerald De Alwis, Vicar of the Christ Church, Dehiwela. At the opening of the session on the 7th the Hon. Neville D. M. Samarakoon, the Chief Justice of the Supreme Court of Sri Lanka will be the chief guest and will address the Council. The most important item on the agenda is the passing of a resolution in reference to Church Union. In the first part of the resolution the council is being asked to decide to make provision in the Church of Sri Lanka which shall provide for any of our members to exercise their freedom of worship and practice thereof as existing at the date of union and for any of our ministers to exercise their ministry of the Word and Sacrament as at the date of union, and to receive their emoluments and benefits including pensions on terms not less favourable than at the date of union while in active full time service in the Church of Sri Lanka or on retirement. In the second part of the resolution the diocesan council is being asked to give consent to present to parliament the Draft Bill cited as the Church of Sri Lanka Consequential provisions Law which had been approved in 1975 by the Diocesan Council and consent then given to present to the national State Assembly. Once the identical resolution has been passed by all the constituent Churches, the Churches could move forward to union.

— *Cor.*

## The Queen's Visit

All arrangements are complete for the Queen's visit to the island on October 21. The Queen's Chief Bodyguard at Buckingham Palace, Detective Inspector Hagen of Scotland Yard has been himself supervising and personally traversing the queen's route here in Sri Lanka along with our own DIGs. The Queen and the Duke of Edinburg will touch down at Katunayake at 4 p.m. on 21-10-81.

## Press Censorship

Under the existing State of Emergency, Press Censorship has been brought into operation from 21-8-81. The Competent authorities are the Secretary to the Minister of State and the Director of Information.

## Educational Reforms and the Democratic Process

A meeting of the Managers, Principals, Vice-Principals and a few educationists was called by Mr. C. E. Anandarajan, Principal of St. John's College, Jaffna at the college on Saturday 26th September at 9 a.m. Mr. K. Nesiah chaired the meeting. In his opening remarks Mr. Nesiah said that it was the custom in England whenever Educational reforms are envisaged to call for confidential reports from leading Educationists and others on the subject. These reports are then brought together and incorporated in what is known as the Green Book. After further discussion and consultation on the contents of the Green Book proposals for reform are put forward in what is known as the White Paper. The Public are then given sufficient time to air their views, criticisms and suggestions. The long and time consuming process of Democracy is allowed to take its course. It is only then brought to Parliament. It was hoped that the Government will give sufficient time for a wide dialogue so that the final proposals may have a general acceptance in the country Mr. Sabalingam and Mr. I. P. Thurairatnam also made their observations. This was followed by a discussion.

The following points were highlighted at the meeting.

1. The Cluster School idea was welcome. It was felt that it could be made workable. However grave fears were expressed about the system being worked successfully with the Core School Principal being in overall charge. The very wording in the White Paper of the relationship of the Principals to the core school Principal, and the additional Principal of the core school seemed to foresee a breakdown of relationships. In that case only the Core School will flourish and not any other. A better structure for working the Cluster Schools was the appointment of a Superintendent of Schools. He could be the choice of the local community and function with a seperate office. This would not increase expenses, as the need for an additional Principal at the Core school, and a seperate office for the Core School Principal would not be there. The Local body or the D. D. C. will have to be drawn in as education should be integrated with socio-economic development. Education cannot be in a vacuum, but in the context of Society, its life-slyle and labour needs.

2. It was a welcome gesture of the system that at no stage is there a rejection of children as happened with the selective test at standard five. The break between the end of the general education at Grade 11 and the University Entrance is a correct step. The University Entrance classes should be larger unlike now when every school tries to open advance level classes for just a few students.

3. The G. C. E. (General Education) was considered to be liberal, and that it introduced the student to his language, culture, environment etc., and was therefore to be welcomed. There was also a flexibility about the whole system, with the open school, and professional schools which also was an advance on previous schemes.

4. Graduates should be trained if they are to teach. In other countries training is a must for teachers. This will mean we will have persons who choose teaching as their vocation. Additional emoluments for those qualifying in studies related to teaching will be an inducement to take to teaching. Graduates taking to the teaching job temporarily and using it as a spring board for better prospects should be eliminated.

5. On the administration side the idea of a *Director of Education* brought back bureaucracy and worked against the democratic set up.

6. A very glaring omission in the White Paper was that no mention at all has been made of the *Education of the disabled* in this I. Y. D. P.

7. There was no Law in the country making education a must for children below a certain age.

8. There was no mention in the White Paper of the number of children to a class.

9. It was a fact that many schools have been ruined by appointments of persons as performing Principals and Functionary Principals. The whole tone, ethos, efficiency and prestige of a school depends very greatly on the Principal. Yet no thought nor weight is given to the appointment of Principals. The Principals should be helped by a Governing Board.

10. The system of Education set out, places a very great responsibility on the teacher. The students need a lot of guidance for this system to attain its object. Therefore there is need for devoted and dedicated teachers.

11. A Vital sector of Education has not been given its place. "The battle of waterloo was fought on the playing fields of Eton" it is said. Co-Curricular activites really build character, create a sense of comradeship and working together, inculcate sacrifice and discipline and prepare them for life.

It was decided to organise a Seminar on a larger scale soon. The meeting closed with Mr. Anandarajan thanking all those who took part.

— *Cor.*

## Christian Home Festival

A Fellowship Service of the Diocesan Women's Fellowship will take place on Saturday, the 10th of October 1981 at 3.30 p.m. in the Manipay Church.

*Speakers :*

**Mr. R. Parmar**

**Rev. H. R. S. Jeyachandran**

All are cordially invited.

**Mrs. Sam Thampoe,**
Convener,
J. D. C. S. I.
Women's Fellowship.

## IN MEMORIAM

IN LOVING MEMORY OF

**Mailvaganam Moses Muttu**

Called to rest on 9-10-72

*"In God's care you rest above in our hearts you dwell with Love.*

**Affectionately remembered by the children, grand children and great grand children.**

**Imyanan,**
**Uduppiddy.**

### *Church News from Abroad*

A cheque for US $ 150,000 was presented on 23-9-81 by the World Council of Churches (WCC) to the League of Red Cross Societies (LICROSS) in Geneva, for flood relief work in China.

The floods, which have swept some six provinces of China have left in their wake more than 1.5 million homeless, at least 750 dead and some 30,000 injured. Some 2.5 million houses were under water at one time and nearly 700,000 hectares of crops seriously damaged. Communication has been badly affected with four main railway lines disconnected for between 10 — 20 days, 80 main roads and 482 country roads washed away.

"This cheque is a sign", Fischer said, Director of the WCC Commission on Inter Church Aid "of the solidarity of the world's Christians with all people affected by such disasters. After the China Red Cross made known its willingness to accept spontaneous gifts, we at the WCC decided to offer this support through LICROSS".

### *In brief*

○ ***A Three Member Compensation Committee*** headed by Mr. Lionel Fernando, a former G.A., Jaffna has been appointed by the government to inquire into claims in respect of damages caused to propery in Jaffna between May 31 and June 2 1981.

# உதயதாரகை
# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141 ] 25 — 9 — 1981 [ இதழ் 39


## வளர்ச்சிக்கு ஒரு வழி

வளரும் வாஞ்சையுடன் பல துறைகளிலும் முன்னேற்றத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது நம் நாடு. வளர வேண்டுமென்ற தூண்டு சக்தி காணப்படுவது சீவராசிகளில் மாத்திரமன்று. நாடுகளுக்கும் அது உண்டு; அது வெளிப்படுவது மாத்திரம் மனித உள்ளங்களுக் கூடாய் எனலாம் எனவே நாடு வளர்வதற்கு நாட்டு மக்கள் மனப்பூர்வ வாஞ்சை கொள்ளவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் நமது நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசிய தேவைகள் எவையெனின் பலரும் பலதையும் கூறுவார்கள். இப்பலதிற் சில பொருளாதாரம் சம்பந்தமானவை; சில கலாச்சாரம் சம்பந்தமானவை; இன்னும் சில சமூக சமுதாய நல்லுறவு சம்பந்தமானவையாகும்.

நமது சிந்தனைக் கெழுந்தபடி இரண்டு தேவைகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். நமது நாட்டின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று போதிய வேலை வாய்ப்பு. தம் வாழ்க்கையை நடத்தவும் தமது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றவும் தேவையானதைப் பெற்றுக் கொள்ள வேலை தேடித் திரிவோர் ஒருபக்கம் — இவர்களின் பாடு உண்மையானது.

இவர்களை விட, நமது மனதில் இருப்பது படித்த பின் அல்லது படிப்பின் இடைநடுவில் செய்வதற் கேதுமற்றுத் தெருத் தெருவாய்த் திரிந்து, அநாவசிய கருமங்களில் ஈடுபட்டுப் பலருக்கும் எதிரான துரோகச் செயல்களைச் செய்து வரும் கூட்டங்கள், இவர்களை எங்கும் காண்கிறோம்; ஏராளமாய்க் காண்கிறோம்.

"சோம்பற் கைகளுக்குச் சாத்தான் வேலை கொடுப்பான்" எனச் சொல்லுவார்கள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டுவரும் அசம்பாவிதங்களில் அநேகம் சோம்பற் கையினோர்க்குச் சாத்தான் கொடுக்கும் வேலைகளே. செய்வதற் கேதும் இருந்தால் இப்பேர்ப்பட்டவர்கள் தம் காலத்தைப் பிரயோசனப்படுத்திக் கொள்ளுவார்கள் என்பதற் கையமில்லை. அரசாங்கமோ தனியார் நிறுவனங்களோ இதை மனதிற் கொண்டு செயலாற்ற வேண்டும் அழிவுக்கு நீட்டப்படும் கரங்களைத் திருப்பி ஆக்க முயற்சிகளுக்குப் பயன்படுத்த வைக்க வேண்டும்.

இன்னுமொரு தேவை வளர்ந்து வரும் சந்ததியின் கட்டுப்பாடான சீவியம் பொதுவாகப் பெரியோரை மாத்திரமல்ல, பெற்றோரைத் தானும் மதிக்காத பிள்ளைகள் எத்தனை பேரின் கதைகளைத் தினமும் கேட்கிறோம் குருபக்தி, தேசபக்தி குன்றியதால் ஏற்படும் கொடூரங்கள், கோபம், வஞ்சகம் தலைதூக்குவதால் ஏற்படும் கொலைகள், பிறர் நன்மை கருதும் பண்புக் குறைச்சலால் ஏற்படும் அவதூறுச் செயல்கள் ஏதோவொரு வகையில் நாட்டின் வளர்ச்சிக்குத் தடை போடுவதோடு சமாதானத்தையும் செழிப்பையும் பாதிக்குமெனச் சொல்லவும் வேண்டுமோ?

முன்னொருகால் நம் கல்வி முறை நாட்டிற்கு உகந்ததாய் இருக்கவில்லை யெனக் குறை கூறினோம். அரசாங்க ஊழியரைப் பயிற்றுவிக்கும் படிப்பாகவே அது அமைந்த தென்றோம். ஆதலாற்றான் கல்வி முறையில் புதுப்புது வழிகளைக் கையாடினோம். தொழிற் கல்வி, சமயக் கல்வி முதலாய புதிய அம்சங்களைச் சேர்த்தோம். அவை இந்தளவும் பயன்படாமற் போயின.

வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டு போகிறது; வேலையற்றோர் பிரச்சனைகள் அதிகரித்து வருகின்றன. கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை வன்செயல்களை ஊக்குவிக்கிறது; பவுத்திர வாழ்வை நடத்த முடியாமற் பாடனுபவிப்பர் தொகையிற் பெருகிய வண்ணம் இருக்கின்றனர்.

இவைகளைக் குறித்து நாட்டின் நலன் கருதிகள் அனைவருமே கரிசனை காட்ட வேண்டும் நமது நாடு வாழ்வதற் குகந்த ஒரு நாடாய் வளர வேண்டும். அதற்கான வழிகளை ஆராய்வதும் அவைகளை நடைமுறைப்படுத்தி நிலைகளைச் சீராக்குவதும் அரசின் கடமை. அரசுக்கு இந்தக் காரியமாய் உதவுவது சகலருக்கும் உரியவொரு கடமை.

---

## செய்திகள்

### வெட்கத்துக்குரிய காரியம் — ஜனாதிபதியின் கூற்று

அண்மையில் நடந்த இலங்கைத் தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் 45ஆம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி J. R. ஜெயவர்த்தன அவர்கள் சமீபத்தில் நாடு பரவலாயும் நடந்த துர்ச்சம்பவங்களைக் குறிப்பிட்டு "எனது நாட்டிலும் எனது ஆட்சிக் காலத்திலும் இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் நடந்தனவே யென வெட்கத்தாற் தலை குனிகிறேன்" என்றார்கள். "எனது சொந்தச் சாதியினரே இரத்தினபுரியிலிருந்த தோட்டத் தொழிலாளரை ஈனவிரக்கமின்றிப் படுமோசமாகத் துக்குள்ளாக்கினார்கள். சட்டத்தின்படி இவர்கள்மேல் நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் உறுதி கூறினார்கள். "ஸ்தலப் பாதுகாவலர் (Home Guards) அணிகளை நிறுவ அரசாங்கம் திட்டமிடுகிறது. இவை நாட்டின் பல பாகங்களுக்கும் நியமிக்கப்பட்டபின் இப்பேர்ப்பட்ட மிருகத்தனமான செயல்களுக்கு இடமிராது" என்றார்கள்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னதாகத் தோட்டங்களிற் தொழில் புரியக் கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழியினர் "லைன்களில்" அடைபட்டிருந்து, கடமையாற்றியதையும் பிள்ளைப் பராயம் தொட்டு இறப்பு வரையும் லைன்களிலேயே தம் நாட்களைக் கழித்து நிர்ப்பந்த வாழ்க்கை நடத்தியதையும் நினைவுபடுத்திய ஜனாதிபதி அவர்கள் இனிமேல் இவர்கள் வாழ்க்கைத் தரத்தை மிகவும் உயர்த்திவிடத் தாம் உறுதி பூண்டிருப்பதையும் எடுத்துக் கூறினார்கள். இத்தோட்டத் தொழிலாளர் குற்றமேதும் இழைக்காத அப்பாவி மக்கள் என்றதினால் அவர்களைக் காப்பாற்றும்படியும் அவர்களுடன் நல்லுறவோடு நடந்து கொள்ளும்படியும் தோட்டத் துரைமாரை ஜனாதிபதி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

### பாவனைப் பொருட்களில் விலை மாற்றம்

சீனியின் விலை ஒரு கிலோ கிராம் அளவிற்கு ரூபா 1-00 குறைக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் மாவின் விலையில் ரூபா 1-15 ஏற்றப்பட்டுள்ளது. இதன்படி சீனியின் விலை 15-50 ஆகவும் மாவின் விலை ரூபா 6-65 ஆகவும் இருக்கும், அரச வட்டாரங்கள் கொடுத்த விளக்கத்தின்படி கூடிய விலையில் அரசாங்கம் இறக்குமதி செய்திருந்த சீனி அதிகம் (சுமார் 40,000 தொன்) இருந்தும், அதிற் போதியளவு விலைப்படாமற் போகிறது. தனியார் துறையினர் குறைந்த விலையில் இறக்குமதி செய்யும் சீனியை விற்பனையாளர் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது என்வே அரசாங்கம் சீனியின் விலையைக் குறைத்ததோடு தனியார் துறையினர் இறக்குமதி செய்யும் சீனிக்கான இறக்குமதி வரியையும் அதிகரித்தது.

சீனியின் விலை குறைப்பால் வரக்கூடிய நட்டத்தைச் சமாளிக்கவே மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பின் நிமித்தமாக 450 கிறாம் நிறையுள்ள பாணின் விலை 2-70 ஆகிறது.

---

### கிறிஸ்த இல்ல விழா

காலம்: 10-10-81 சனிக்கிழமை
பி. ப 3-30 மணி.

இடம்: மானிப்பாய்த் தேவாலயம்

பேச்சாளர்:

திருமதி R. Parmar

அருள்திரு.
H. R. S. ஜெயச்சந்திரன்

அனைவரும்
அன்பாய் அழைக்கப்படுகிறீர்கள்.

திருமதி சாம் தம்பு
பெண்கள் ஐக்கியம் கூட்டுபவர்
தெ. இ. தி. — யா. அ. ஆ.

---

## செய்திகளின் சாரம்

### விலையுயர்ந்த பீங்கான் கூஜா

ஈரான் மன்னர் அப்பாஸ் ஒரு காலத்தில் வைத்திருந்த சீனப் பீங்கான் பாத்திரங்களில் ஒன்று ஒரு சிறிய கூஜா. இது 15ஆம் நூற்றாண்டுக்குரியது. அழகிய படங்கள் சித்தரிக்கப்பட்டது. மன்னர் இதை மோகல் அரசர் ஜெகாங்கீர் என்பவருக்கு உபகாரமாகக் கொடுத்திருந்தனர். அவரிடமிருந்து ஏதோவொரு வகையில் வங்காளத்தில் அரச சேவையிலிருந்த ஜோன் மறே மக்கிரெகர் அவரிடத்தில் இந்தக் கூஜா சேர்ந்தது — 1800ஆம் ஆண்டு வரையில். சமீபத்தில் இது லண்டன் ஏல விற்பனை ஒன்றில் நாற்பது லட்சம் ரூபாவுக்கு விற்கப்பட்டது! அதுவும் பெரிதல்ல. இந்தளவு விலை கொடுத்து வாங்கியவர் சிங்கப்பூர் கோடீஸ்வரன் ஒருவருக்குச் சுமார் எண்பது லட்சம் ரூபாவுக்கு அதை விற்றனராம்!

---

### ஜெபத்தில் சிறந்த சான்றோர்
### சாது சுந்தர் சிங்

— புலவர் சே. சுந்தரராசன் —

(முற்றொடர்ச்சி)

மரண இருளைக் கண்ட சுந்தர் இரவு நேரத்தில் இதயவுணர்வு இறைவனை வேண்டினார். ஜெபித்தார். விசுவாச ஜெபம் பிணியாளியை இரட்சிக்குமல்லவா? நீதிமானுடைய ஜெபம் கேட்கப்படுமல்லவா? சுந்தர் இறைவனின் வல்லமையால் சுகம் பெற்றார். காலை வந்த மருத்துவர் சுந்தரை உயிருடன் கண்டு காரணங் கேட்டுத் தாமும் அன்றுமுதல் கிறிஸ்தவரானார். உயிரளித்த ஜெபம் மற்றோருயிரையும் மீட்டுவிட்டது வல்ல செயலன்றோ?

பதினாறு வயதில் இயேசுவை ஏற்ற சுந்தர், இறுதிவரை அவரை மறவாது மறுதலியாது வாழ்ந்தார். வாலிபப் பருவத்தில் படைத்தவரை நினைத்தார். இயேசுவை நினைந்து அவரோடு வாழும் வாழ்வே இனிய வாழ்வென உணர்ந்தார். சுடச்சுடப் பொன் ஒளி மிகுவதுபோல ஆண்டவர்க்காய்ப் பல இன்னல்களை ஏற்று ஒளிபெற்று விளங்கினார், வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதையே தம் கடமையெனக் கொண்டார். அதற்காகத் தம் உயிருக்கு முடிவுவரினும் மகிழ்ச்சியோடு ஏற்க ஆயத்தமானார்,

ஒருமுறை திபெத்து சென்றார். புத்த மத இருப்பிடம் அது. லாமாக்கள் அங்கு வாழ்ந்தனர். இயேசுவை அப்பகுதியில் அறிவித்தார். அவரை எதிர்த்துக் குற்றஞ்சாட்டி, மரண தண்டனை அளித்தனர். பிணக் கிணற்றில் எறிந்தனர். அக்கிணறு இரும்பு மூடியுடனிருக்கும். வாயிற் பகுதியைப் பூட்டிவிடுவர். சாவி தலைலாமாவின் இடையில்தானிருக்கும்.

மரண தண்டனையடைந்த பலர் அக்கிணற்றில் எறியுண்டனர். அங்குச் சுந்தருக்குப் பிணநாற்றம் தாங்கமுடியவில்லை. மூன்று நாள் அந்த இடத்தில் உயிர்ப் பிணமாய் இருந்தார். இறைவனிடம் முறையிட்டார். மூன்றும் நாள் இரவு 'கயிற்றைப் பிடி' என்ற சத்தம் சுந்தர் காதில் விழுந்தது. கயிற்றைப் பிடித்தார். வெளியே வந்து சேர்ந்தார். மயக்கம் தெளிந்தார். இறைவனுக்கு நன்றி செலுத்திப் போற்றினார். பூட்டுத் திறக்கப்படாமலிருக்கவும் சுந்தர் வெளியே வந்திருப்பதைக் கண்ட தலைலாமா பயந்து, வியந்து, நயந்து பேசி வழியனுப்பிவிட்டார். சுந்தர் ஒரு ஜெப வீரர். அவர் வாழ்க்கையே ஒரு ஜெபமயமான வாழ்க்கை. அவருடைய வாழ்க்கை வரலாறும், அவர் எழுதிய நூல்களும் இதனைத் தெளிவாக விளக்கும்.

'சிறந்த வேதநற் செம்பொருள்
அறிந்திடற்கென் னகத்தினைத்
திறந்தவைத்தருள் சிலுவை மீ
திறந்துயிர்த்தவென்
இயேசுவே."

— இரட்சணிய மனோகரம்

நன்றி: மணமலர்,

தியானப் பகுதி

# யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்

[அருள்திரு கலாநிதி ஜேம்ஸ் மேதர் போதகர் அவர்களால் தாரகைக்கெனத் தரப்பட்டது.]

சீகேம் என்ற இடத்தில், யோசுவா இஸ்ரவேல் சனங்களைக் கூடச் செய்து, அவர்களுக்கு முன்பாகக் கர்த்தரையும், விக்கிரகங்களையும் வைத்து, "யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்" என்று அபயமிட்டு, அழைத்தான். இதே விதமான அபயமும் அழைப்பும் இப்போதும் நமக்குக் கர்த்தரிடமிருந்து வருகிறது. நம்முடைய வேதத்தில் இரண்டு தூண்களைப் பற்றிச் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியும் :- உப்புத்தூண்; ஆதியாகமம் 19-ம் அதிகாரம் 26-ம் வசனம், லோத்தின் மனைவி உப்புத் தூணுனுள் என்று சொல்லுகிறது. இது எச்சரிப்பின் தூண். கடவுள் கொடுத்த நன்மைகளை அனுபவித்துக்கொண்டு, அவருக்கு நன்றியறிவில்லாதவராய், அவருடைய அழைப்பை அசட்டை செய்து, அவர் கூறியதை மதியாது நடக்கிறவர்கள் இப்படியே கரைந்து, அழிந்து, அற்றுப்போவார்கள் என்று இத்தூண் என்றும் யாவரையும் எச்சரிக்கின்றது.

இரும்புத்தூண்: எரேமியா 1:18-ம் வசனம் பாருங்கள். தேசம் முழுவதும், இருளாயிருக்கையில், கர்த்தர் எரேமியாவை அழைத்து அதிக கஷ்டமான ஒரு வேலையை ஒப்படைத்தார். எரேமியா சுமக்க முடியாத சுமையாயிருந்தது. ஆனுல் அவன், கர்த்தரில் தன் முழு நம்பிக்கையையும் வைத்து அவரிடம் தன்னை ஒப்படைத்தான். எந்தச் சுமையையும் தாங்கக்கூடிய, உறதியும் பெலமுமுற்ற இரும்புத் தூணாக, அவனைக் கர்த்தர் நிறுத்தினுர்.

இன்று இந்த இரண்டு தூண்களும் நமக்கு முன்வைக்கப்படுகின்றன. உப்புத் தூண்களாகவோ இரும்புத் தூண்களாகவோ இருக்க விரும்புகிறீர்களென்று, இன்று தெரிந்துகொள்ளுங்கள் என்று கர்த்தர் யாவரையும் அழைக்கிருர்.

(1) கடவுள் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் பல சலாக்கியங்களுள், அதிக விசேஷமான ஒன்று, மனிதனின் தெரிவுசெய்து, தீர்மானம் செய்யும் சுயாதீனம். இந்த சலாக்கியம் அதிக பாரமான (Onerous) உத்தரவாதமாயும் பொறுப்பாயும் இருக்கின்றது. ஒரு ஆளின் தெரிவு சரியோ, பிழையோ என்பதில் அந்த ஆளுடைய ஜீவியத்தின் வாழ்வும் தாழ்வும், அனுகூலமும் பிரதிகூலமும் தங்கியிருக்கின்றது. உதாரணமாக, பிழையான தெரிவு, உத்தியோகத்தில், விவாகத்தில், சிநேகிதரில்; இவைபோன்ற பல காரியங்களில் நூற்றுக்கணக்கானவருடைய ஜீவியத்தை நாசப்படுத்தியிருப்பது உங்களுக்குத் தெரியும். அதுபோல், இவைகளில் சரியான, நல்ல தெரிவுகள் செய்தோரின் ஜீவியம் மகிமையுள்ளதாயிற்று. குயவன், களிமண்ணிலிருந்து பாத்திரங்களை, அவன் விரும்பிய உருவத்துக்கு அமைப்பதுபோல், மனிதனுடைய ஜீவியம் அவனுடைய தெரிவுகளால், தெரிவுகளின் சாயலின்படி உருப்படுகிறது. (Our choices shape our lives).

(2) கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்று எங்கள் இரட்சகர் பலமுறை சொன்னுர். உதாரணமாக, பரி. மத்தேயு 11:15 பாருங்கள். அதின் ஒரு அர்த்தம், கடவுள் ஒருவரையும், கேட்கும்படி பலவந்தப்படுத்துகிறதில்லை, மனிதனே, தெரிவுசெய்ய வேண்டும்; 'உற்றுக் கேட்பதோ' அல்லது 'காதுகளைப் பஞ்சால் அடைத்துக்கொள்வதோ' என்பது மனிதனின் தெரிவு. சிருஷ்டிப்பிலேயே கடவுள் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் ஒரு சலாக்கியம் இது. பெரிய உத்தரவாதமான சலாக்கியமாயும் இது இருக்கின்றது.

மோசே, முட்செடி எரிகிறதைக் கண்டான். ஆகிலும் தேவன் அவனோடே பேசவில்லை. ஆனுல் அவன் முட்செடிக்குக் கிட்டப்போய் "இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன்" என்று திரும்பியபொழுதுதான், கர்த்தர் அவனோடே பேசினுர். யாத்திராகமம் 3:3-4 பாருங்கள். நாம் இன்று செய்யும் தெரிவுகளில் கர்த்தர் நமக்குத் தர ஆசிக்கும் நன்மைகள் கிடைப்பது தங்கியிருக்கின்றன.

(3) மூன்று விசேஷமான தெரிவுகள். யாவரும் தெரிவுசெய்து, திட்டமான தீர்மானம் செய்யும்படி மூன்று விஷயங்கள் முன்வைக்கிறேன். விரிவாய் எழுத இடமில்லை. நீங்களே, இவைகளைப்பற்றி ஜெபதியானம் செய்யுங்கள்; "யாரைச் சேவிப்பீர்கள் என்று, இன்று தெரிந்துகொள்ளுங்கள்".

(அ) என்னுடைய ஜீவியகாலம் முழுவதும், என் சித்தத்தை நான் தெரிவுசெய்யாது கர்த்தருடைய சித்தத்தை அறிந்து, அதையே செய்யத் தெரிவுசெய்வேன்.

(ஆ) சரியைச் செய்வது நட்டமாயும், பிழையைச் செய்வது ஆதாயமாயுமிருந்தாலும், எப்பொழுதும் பிழையானவைகளைத் தள்ளி, சரியானவைகளைச் செய்யத் தெரிவுசெய்வேன்.

(இ) என்னுடைய பலவிதமான கடமைகள் மத்தியில், எல்லாக் கடமைகளுக்கும் முதல் கடமையாய், என் இரட்சகர் இயேசுவுக்கும், அவருடைய சபைக்கும் நான் செய்யவேண்டிய கடமைகளைத் தெரிவு செய்வேன்.

இத்தெரிவுகள், நிச்சயமாய் உங்களை இரும்புத் தூண்களைப் போலாக்கும். உறுதியும், பெலமும் உள்ள அடியாராய் கடவுளை என்றும் நீங்கள் மகிமைப்படுத்துவீர்கள்.

(4) ஒரு எச்சரிப்பு. உப்புத் தூணை மறவாதிருங்கள். கடவுள் நமக்குச் செய்த நன்மைகளை மறவாது என்றும் நன்றியாயிருப்பதுடன், அவருடைய துணை, தோழமை, வல்லமை இல்லாது, நாம் ஒன்றும் செய்யத் திராணி அற்றவர்கள் என்பதை என்றும் மனதில் ஆழமாய் பதித்து ஜெபியுங்கள்.

இயேசு சொன்னுர், "என்னையல்லாமல் உங்களால் என்றும் செய்யக்கூடாது." பரி. பவுல் எழுதினுர், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினுலே, எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலன் உண்டு."

ஆம், நமது தெரிவின்படி நாம் உண்மையாய்ச் சீவிக்க, என்றும், அவருடைய வல்லமையைப் பெற்று, இந்தப் பந்தய ஓட்டத்தை "இயேசுவில் எங்கள் கண்களைப் பதித்த வண்ணம்", பொறுமையோடே ஓடுவோமாக.

[அருள்திரு. ஜேம்ஸ் மேதர் அவர்கள் இம்மாதம் 30-ம் திகதியன்று தமது 91ஆம் பிறந்த தினத்தைக் கொண்டாடுவார்கள். "தாரகை" அவர்களை வாழ்த்துகிறது. — ஆசிரியர்.]

---

# சரித்திரத்தில் ஒரு சம்பவம் — 1

டொன் போலெஸ் உத்தம கிறிஸ்தவர்; உண்மையும் நேர்மையுமான பத்திரிகை நிருபர். அமெரிக்காவில் தேசியத் திருச்சபைச் சங்கத்தில் உத்தியோகத்தரில் ஒருவராயிருந்த டொனுல்ட் போலெஸ் அவர்களின் குமாரனுகிய இவர் கீழுலக வன்மக் குழுக்களின் அட்டூழியங்களைச் சகியாதவர். அவைகளின் நடமாட்டங்களைக் குறித்துத் தாம் நிருபராயிருந்த அரிசோனு றிப்பப்ளிக் பத்திரிகையிற் பல விடயங்களையும் பிரசுரித்து, எப்படியும் இக் கீழுலகக் கொடுமைகளை நீக்க வேண்டுமென முயற்சித்தவர். இவைகளையிட்டு இவர் துருவி அறிந்து வெளியிட்ட செய்திகளின் நிமித்தம் பல பரிசுகளும் அளித்துக் கௌரவிக்கப் பட்டவர்.

ஆண்டு 1976. டொன் போலெஸ் தனது பத்திரிகை வேலை சம்பந்தமாய், பீனிக்ஸ் நகரில் கார் நிறுத்தும் ஒரு சாலையில் தனது காரை நிறுத்திவிட்டு அருகிலிருந்த ஒரு காரியாலயத்திற்குள் சென்றனர். சிறிது வேளை கழித்துத் திரும்பி வந்தனர். காரில் ஏறி உட்கார்ந்து யந்திரத்தை இயக்கும்படி சாவியைத் திருப்பினர். பிரமாண்டமான ஒரு குண்டு காரின் கீழாக வெடித்தது. கார் சுக்கு நூருய்ப் பறந்தது. டொன் தலத்திலேயே மரித்தார்.

1980 ஆம் ஆண்டு இறுதிப் பாகத்தில் ஜோன் ஹார்வே அடம்சன் என்பவர்மேல் டொன் போலெஸ் என்பவரைக் குண்டு உபயோகித்துக் கொலை செய்ததாய்க் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது அடம்சன் கீழுலக வன்மக் குழுவொன்றைச் சேர்ந்தவரென்றும், இக்குழுக்களிற் செல்வாக்குடைய சில தலைவர்களால் டொன் போலெஸைக் கொலை செய்யும்படி 10,000 டொலர் "கூலி" கொடுக்கப் பட்டவரென்றும் தெரிய வந்தது. அடம்சன் டைனமைற் வஸ்துவைக் கொண்டு சக்தி மிகுந்த ஒரு குண்டைத் தயாரித்து டொனுடைய கார் இயந்திரச் சாவியுடன் அதை இணைத்து விட்டிருந்ததாகக் கூறப்பட்டது. இக்கொலைக்கு நியாயம் டொன் போலெஸ் கீழுலகக் குழுக்களின் வன்மச் செயல்களைப் பற்றி வெளியிட்ட ஒரு அறிக்கையின் நிமித்தம் கோபஞ் சாதிப்பதெனக் காணப்பட்டது.

பீமா மாகாண மேல் நீதிமன்ற நீதியரசர் பென் பேர்ட்சோல் அவர்கள் அடம்சன் மேல் மரண தண்டனை விதித்து, தண்டனையை இலகுவாக்குதற்குரிய எவ்வித முகாந்தரத்தையும் தான் காண்முடியாதிருக்கிறதென்று கூறினுர். அடம்சன் அப்பீல் மனு அனுப்பாத பட்சத்தில் நச்சுப்புகை அறையில் இடப்பட வேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

டொன் போலெஸின் சகோதரன் டிக் போலெஸ் (தேசிய வேலை வாய்ப்பு அபிவிருத்தித் தலைமையதிகாரி) தனது சகோதரனுடைய அகால மரணத்தையிட்டுப் பிரபலக் கவிதையொன்றை எழுதி வைத்தார்கள். அதிலிருந்து சில பகுதிகளை மொழி பெயர்த்துத் தருகிறோம் :

எவரும் தன் மரண வேளையை
அறியார் என வேதம் சொல்
வது உண்மையென் றறிவேன்
...... ஆ, கர்த்தாவே, வாழ்வின்
மத்தியிலும் நாம் சாவுடன்
வாழ்கிறோமே.

சுரங்கத் தொழிலாளி ஒருவன்
ஒருமுறை செப்பியதுபோல
நாம் ஒவ்வொருவரும் ஒவ்
வொரு கணமும் சொல்ல
வேண்டியிருக்கிறது: கர்த்
தாவே, எவராயினும் இன்று
மரிப்பதானுல் அது நானுயிருக்
கட்டும். ஏனெனில் நான்
ஆயத்தமாயிருக்கிறேன் ... .....

டொனும் நானும் ஒன்றை
அறிந்திருந்தோம்: கடவுளுக்
கும் ஒரு குமாரன் இருந்தார்.
வாலிப வயதிலேயே கொடூ
தனமாய் அவரைக் கொலை
செய்துவிட்டார்கள். ஆகவே
நான் இந்த வேளையிற் படும்
துயரத்தையும் மன வேதனை
யையும் சர்வமும் படைத்த
தயாபரன் நன்கு அறிவார்....

டொன் இல்லாமற் போனுரே
என்று நான் துக்கிக்கவில்லை —
அவர் இல்லாமற் போகவில்லை
யென நான் நன்கறிவேன்.......

விசுவாசத்தாலும் சாவுத்தறு
வாயில் இருந்து திரும்பிப்
பிழைத்தவர் செப்பிய கதைக
ளாலும் இதை நான் திடமாய்
நம்புவேன் :— உடம்பு உயிரை
இனித் தாங்கக் கூடாத வேளை
யில், உள்ளிருந்த ஆவி பிரிந்து,
தான் முன்னெருபோதும் கண்
டிராத பிரகாச ஒளியொன்றை
நோக்கிச் செல்கிறது. அங்கே,
அப் பிரகாசத்தின் மத்தியிலே,
சொல்லுதற்கரிய சமாதானம்
மிகுந்த அத் தலத்திலே, உண்
மையும் நீதியும் ஆட்சி செய்
யும் அத் தலத்திலே, தன்னிரு
கரங்களையும் வரவேற்பின்
பாவனையாய் நீட்டியவராய்,
அன்பின் சொரூபி ஒருவர் நிற்
கிறுர்.........

[எழுதியவர்-ஆசிசி; ஆதாரம்-பல]

ஆசிரியர் குறிப்பு:— "சரித்திரத்தில் ஒரு சம்பவம்" என்ற இத்தொடரிற் பிரசுரிப்பதற்கு விடயங்களை அனுப்பும்படி வாசகர்களைக் கேட்கிறோம். சம்பவங்கள் உண்மையில் நடந்தவையாய் இருக்க வேண்டும். கிறிஸ்த விசுவாசத்தைத் தழுவியவையாய் அல்லது கிறிஸ்த குணுதிசயங்களை வெளிப்படுத்துபவையாய் இருக்க வேண்டும். எவ்விடத்தில், எக்காலத்தில் நடந்த சம்பவமாயும் இருக்கலாம். எழுதியவர் பெயரும் ஆதாரமும் குறிக்கப்பட வேண்டும்.

ஆசிசி,

*EDITORIAL*

## "Thou Shalt Not Kill"

The first World Sanctity of Life Sunday falls on October 18, this year.

The Order of Christian Unity has made an appeal to all Christians to remember in their prayers the sacredness of human life on this day.

Mountains of documents have been released and millions of eye-witnesses have come forward to testify to the painful destruction of human life by systematic human actions in the countries of South East Asia in recent times.

Political killings apart, there have been other sophisticated ways by which people have sought to destroy human life on various pretexts.

Since M. C. Daga, Member of the Indian Parliament, presented on May 4 last year, (in the Indian Parliament) a Bill called *The Mercy-Killing Bill (1980)*, the topic *Euthanasia* has been talked about much in religious and scientific circles.

The National Christian Council of India has called upon all Christians to resist this Bill whose legal, social and sociological implications have yet to be studied by everyone at great depth.

The Greek word *Euthanasia* means "benign death". It does not mean "Mercy-Killing". It refers to the kind of death provided for, by Mother Teresa in her mercy-campaign of the dying destitutes in Calcutta. People who are left to die on the streets are brought to Nirmal Hirdaya Home to be nursed and given a benign death in an atmosphere of love.

In the history of the Church, the death which the Christian has often courted is not "mercy killing" but a death to end a stigmatic existence.

The term "zealot" takes its origin we know, from that patriot band of *zealots* — men, women and children, who led by Eleazar ben YA'ir, retreated into the boat shaped Judean fortress of *Mesada* and held out for three years against Roman oppression.

When, finally, 5000 men of the Roman Tenth Legion besieged the rampart and succeded in drilling their way through the massive walls to blow up the fortress, the leader of the zealots said "Now, it is time to leave this world *unenslaved*".

The story of how the zealots left the world "unenslaved" in batches, is a story that has been perhaps told and retold to our Christian children in their homes by their parents or grand parents.

The zealot band left behind them at Mesada one significant relic — a small store of provisions to show the enemy that they did not die of starvation.

*Euthanasia* has never been in the vocabulary of the Christian in his life encounter. "Every storm" the Christian believes, "strengthens the native oak".

The observance of the First World Sanctity of Life Sunday (18-10-81) has a special significance and relevance for us here in Sri Lanka, which has been in the vortex this year of a spate of unexpected killings.

"To encounter God in the other" is the greatest challenge of our time. Every human life is sacred whether it belongs to an unborn infant, a terminally ill patient, a disabled person, or one whose political views are different from ours.

If, as human beings, we are unable to *give* life to those who need it, what right have we to *take* it? The Christian zealot is never one who kills. He is one who dies "unenslaved.

## GOODWILL OR VIOLENCE

*(as a means of social change)*

BY

**The Revd Celestine Fernando**

*(Continued from our last issue)*

C. **A failure in religion and morality**

What can religious leaders do in this situation? It is not enough for religious leaders to be content to preach and teach their respective religious and also allow them to be exploited for commercial and political purposes or exploit them ourselves as we seem to have done with and to our religions and their teachings these past years. Nor is it enough to be satisfied with what we are doing just now to prevent the evils of violence and to promote the ways of peace. Even though most certainly much good has come from our religions and many have been greatly blessed by many of the religious institutions and organisations in the land the general impression created by religious instituions is far from complimentary nor is it an adequately powerful witness to the religio-moral resources and values professed.

One of our biggest problems is that far too few who profess to be religious seem to know much about religion. In many of our homes neither the parents nor therefore their children seem to understand the basic truths of the religion they profess. They pay little attention to the understanding or the practise of it. Their actual styles of life are often quite materialistic and competitive and conform to standards other than what their religions teach. Such "religion" has no message for even family life, for daily discipline, for the use of power and money, for our quarrels, separations and the divorces that we see. It is not surprising that such religion cannot also help much in politics, economics and nation building. There is a tremendous amount of religious and psychological schizophrenia as a result — causing distorted lives and making our disintegrated society worse — without the essential resources to help the processes of unity, goodwill and peace, and for any appeals for a new order to be meaningful. A double standard and double lives cannot bring us peace whether in religion or in politics.

*(to be continued)*

## The Jaffna Mayor's Public Library Appeal

The wanton destruction of the Jaffna Public Library — a magnificent building that contained a collection of 97,000 books and rare manuscripts is perhaps the most shamefully tragic event in the island's history.

2. Jaffna it is well known enjoys the reputation of being the intellectual and spiritual centre for the Tamils of Ceylon, thanks to an illustrious line of savants, statesmen and god's men. The names of Srila Sri Arumuga Navalar, Ananda K. Coomaraswamy, Fr. Gnanapragasar, Sir Ponnambalam Brothers, Leaders of Tamil Nationalism G. G. Ponnampalam and Thanthai S. J. V. Chelvanayagam, and last but not least Ven'ble Siva Yoga Swamigal stand out among a huge host of immortals.

3. The Jaffna Public Library in its 50 years of existence attained a stature worthy of this tradition. It is with reverence and gratitude that people remember stalwarts lik K. N. Chellappah who mooted the idea effectively, the first Mayor of Jaffna Sam A. Sabapathy who ventured on the building project with the Council's approval. Fr. T. M. F. Long who sailed the high seas to collect funds, and institutions like the Asia Foundation and the Indian High Commission which contributed substantially to complete the project.

4. While we deplore with the civilised world this barbarous act of cultural assassination we feel, we should not lose time in restoring this symbol of our peerless heritage. We are therefore launching an appeal for funds from friends and well-wishers and we are confident you are in sympathy with our efforts.

5. 'Adversity sees miracles' in the words of Shakespeare; and we are emboldened to reconstruct a modern library, with better amenities and more spacious accommodation while conforming to the original plan in its essentials.

We expect that you will want to contribute the maximum you could spare for a worthy cause like this that is estimated to cost approximately fifteen million rupees.

The Jaffna Public Library Trust Fund Account No. 2893 has been opened in Bank of Ceylon, Jaffna, and we shall be grateful if you can send your contribution direct to the Bank with advice to us.

Thank you.

Yours sincerely,
**R. Visuvanathan,**
Mayor Jaffna.

## Defence Academy Cadets at the Universities

Thirty three cadets of Sir John Kotelawela Defence Academy of Sri Lanka are reading for their degrees at the Moratuwa and Colombo Universities. 19 are doing engineering and two architecture at the Moratuva University. The remaining 11 are following the Physical Science Course at the Colombo University.

On their graduation they will be absorbed to the three armed Services as Officers.

## Minister on the uses of the TV Medium

After gifting a TV set to the people of the remote village of Govikam Pedessa, (wedged in a valley between Ratmalana Airport and Attidiya Road), Minister Athulath Mudali said that most of the TV programmes were in English and those who viewed them would gradually learn and understand English.

*English, the Minister said, was no less important than Sinhala.* A knowledge of English would open more avenues for employment and TV would help them to acquire that knowledge.

Soon election meetings would be televised and there would be no need for people to go to election meeting. The government had provided for that in the new Elections Ordinance. The TV medium would therefore be of great importance to Sri Lanka.

*IN BRIEF*

- *The CTB* will soon be selling advertising space both inside buses, outside buses and on bus shelters. Advertising agencies who buy space at the bus shelters must take responsibility of maintaining the shelters. There is at present a fleet of 2500 buses plying in Colombo and 6000 in the rest of the island.
- *No Petrol-driven Cars* could be now imported into the country for private use, with an engine capacity exceeding 1500 c. c. The limit for diesel cars is 2200 c. c.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100/25/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 25th September 1981 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.